ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் சென்னை-600 015 23 MAR 2021

17673

**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் – அய்யன்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திரு.ஆர். சுந்தரராஜ் 12.10.2020 முதல் 11.11.2020 முடிய வெளிநாடு (அமெரிக்கா) சென்று வந்தமைக்கு பின்னேற்பு ஆணை வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–4) துறை**

அரசாணை (வாலாயம்) எண்.61 — நாள் 26.02.2021.
சார்வரி, மாசி 14,
திருவள்ளுவர் ஆண்டு 2052,

COMMISSIONER OF RURAL DEVELOPMENT AND PANC. CHENNAI 600 22 MAR 2021

படிக்கப்பட்டவை:

1. ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.4434/2020/அ4(1), நாள் 07.10.2020.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க. எண்.44069/2020/பரா1–4, நாள் 02.11.2020.
3. அரசுக் கடிதம் எண்.15081/ப.ரா–4/2020–1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.11.2020.
4. ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.4434/2020/அ4(1), நாள் 07.12.2020.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க. எண்.44069/2020/பரா1–4, நாள் 01.02.2021.

*****

**ஆணை:**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், அய்யன்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திரு.ஆர். சுந்தரராஜ் அவர்கள் சொந்த வேலையின்காரணமாக 12.10.2020 முதல் 11.11.2020 முடிய வெளிநாடு (அமெரிக்கா) சென்று வர அரசின் அனுமதி கோரிய மனுவினை, இணைத்து அனுப்பி மேற்படி நபர் வெளிநாடு சென்றுவர 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 82A பிரிவின்படி அரசின் முன் அனுமதி வழங்குமாறு கோரி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளர், திண்டுக்கல், அவர்களின் கருத்துருவினை மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதம் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்திருந்தார்.

...2

2. 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 82Aன்படி சிற்றூராட்சியின் தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றமொன்றில் அல்லது மாவட்ட ஊராட்சியொன்றின் தலைமையர், துணைத் தலைமையர் அல்லது உறுப்பினர் பதவியை வகித்து வருகின்ற நபர் எவரும் அரசின் எழுத்து வடிவிலான அனுமதியுடனல்லாமல், அவ்வாறான தமது அலுவலகத் தகுதியில் அயல்நாடு எதற்கும் பயணம் எதனையும் மேற்கொள்ளுதல் கூடாது.

3. இந்நேர்வில், நிர்வாகக் காரணங்களால் தாமதமாக பெறப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரால் முன்மொழியப்பட்ட கருத்துருவானது, தனியரின் உத்தேச பயணகாலத்திற்கு பின்னர் அரசில் பெறப்பட்ட நிலையில், பார்வை 3ல் படிக்கப்பட்ட அரசு கடிதத்தின் மூலம் தனியர் அயல்நாடு(அமெரிக்கா) சென்று 11.11.2020ல் திரும்பிவிட்டதை உறுதி செய்து, பின்னேற்பு ஆணைக்கான திருத்தப்பட்ட கருத்துருவை அனுப்பி வைக்கக் கோரிய நிலையில், தனியர் நாடு திரும்பி, ஊராட்சி மன்ற தலைவராக மீள பணியேற்றுக்கொண்டதை உறுதி செய்து, பார்வை 4ல் படிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர்/ ஊராட்சி ஆய்வாளர் அனுப்பிய பின்னேற்பு ஆணைக்கான திருத்தப்பட்ட கருத்துருவினை, பார்வை 5ல் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதம் மூலம் அரசிற்கு இணைத்து அனுப்பியுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை ஏற்று உரிய விதிகளின் கீழ் அரசு ஆய்வு செய்தது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், அய்யன்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திரு.ஆர்.சுந்தரராஜ் சொந்த வேலையின்காரணமாக 12.10.2020 முதல் 11.11.2020 முடிய வெளிநாடு (அமெரிக்கா) சென்று வந்தமைக்கு பின்னேற்பு ஆணை வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
திரு.ஆர்.சுந்தரராஜ், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
அய்யன்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர், திண்டுக்கல் மாவட்டம்.
**வழி:**- மாவட்ட ஆட்சித் தலைவர்/ ஊராட்சிகளின் ஆய்வாளர்,
திண்டுக்கல் மாவட்டம்.
ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர்,
திண்டுக்கல் மாவட்டம்.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை – 15.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thiagarajan 24/2/2021
பிரிவு அலுவலர்.